பக்கங்கள் 14 + 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 18 ஞாயிற்றுக்கிழமை 02.03.2025 | அதிர்வு 211

## பதுளையில் மண்சரிவு! இரண்டு வீடுகள் சேதம்!!

பதுளை, தெமடவெல்லின்ன கிராமத்தில் தொடர்ச்சியாகப் பெய்த அடைமழையால் இடம்பெற்ற மண்சரிவில் இரண்டு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், மேலும் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன. 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# கீத் நொயர் கடத்தல்: மேலும் இருவர் கைது

### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையில் கடந்த 2008ஆம் ஆண்டு சிரேஷ்ட ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் கீத் நொயர் 2008ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி தெஹிவளை பகுதியில் கடத்தப்பட்டதுடன் அவர் மீது கடுமையான தாக்குதலும் நடத்தப்பட்டது. 04



### பருத்தித்துறையில் பரபரப்பு

# மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

### ஒருவர் காயம்; மற்றொருவர் தப்பியோட்டம்









(ந.லோகதயாளன்)

யாழ். பருத்தித்துறையில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் ரக வாகனம் மீது இன்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். அத்துடன் மற்றுமொருவர் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற 02

# மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிப்பர் வாகனம் ஒன்றைப் பொலிஸார் மறித்தபோது, பொலிஸாரின் கட்டளையை மீறித் தப்பிச் செல்ல முற்பட்ட போது பொலிஸார் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில், மற்றையவர் டிப்பர் வாகனத்தில் இருந்து பாய்ந்து தப்பியோடியுள்ளார்.

காயமடைந்த நபரைப் பொலிஸார் கைது செய்து, பொலிஸ் பாதுகாப்புடன் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தனர். அவருக்கு அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, தப்பியோடிய நபரைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.













## ‘வல்வெட்டித்துறை: ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்’

# அறிக்கை வெளியீடும் ஊடக சந்திப்பும்

**(எஸ்.ரகுதீஸ்)**

‘வல்வெட்டித்துறை: ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்’ என்ற அறிக்கை வெளியீடும் ஊடக சந்திப்பும் இன்று யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்றது.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையை இந்திய இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இன்று வெளியிட்டு வைத்தனர்.

பாதிக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அக வணக்கம், பொதுச்சுடர் ஏற்றல், மலர் அஞ்சலியைத் தொடர்ந்து வரவேற்புரையை மூத்த ஊடகவியலாளர் எஸ் தில்லைநாதன் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சோ.தண்டாயுதபாணி தேசிகர், யாழ். மறை மாவட்டத்தின் மூத்த குருவும் முன்னாள் ஊரணி மயிலிட்டி பங்குத் தந்தையும் இலண்டன் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குநரு மான அருட்தந்தை தேவராஜன் அடிகள் ஆகியோர் அஞ்சலி உரையை ஆற்றினர்.

தொடக்க உரையை வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு செயலாளர் ந. ஆனந்தராஜ் ஆற்றினார்.

அதன் பின்னர் அறிக்கை அறிமுகமும் பிரதிகள் வழங்கலையும் தொடர்ந்து சிறப்புரைகளை மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிறிட்டோ பெர்னாண்டோ மற்றும் வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு தலைவர் ச.செல்வேந்திரா ஆகியோர் ஆற்றினர்.

நன்றியுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் கு.மகாலிங்கம் நிகழ்தினார்.

இந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக் கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




















# யாழ். ஊடக அமையத்தில் விக்டர் ஐவனுக்கு அஞ்சலி




(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் ஊடக வரலாற்றில் புலனாய்வு செய்தியிடல் ஊடகப் பரப்பில் கோலோச்சி மறைந்த, ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனுக்கு யாழ். ஊடக அமையத்தில் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் பங்களிப்புடன் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இடதுசாரி கொள்கையைக் கொண்ட, 1949 முதல் 2025 வரையான அவரது வாழ்க்கை வரலாற்றில் சுமார் 35 வருட காலமாக இலங்கையின் இதழியல் துறையில் மட்டுமின்றி நாட்டின் அரசியல் சமூகத்திலும் தனக்கென்று ஒரு இடத்தை வகுத்து துணிச்சலுடன் செயற்பட்டு வந்த விக்டர் ஐவன் கடந்த ஜனவரி 19 ஆம் திகதியன்று காலமானார்.

இந்நிலையில், ஊடகத்துறையினர் மட்டுமல்லாது அரசியல் மற்றும் பொது அமைப்புகள் என அவரை நினைவுகூர்ந்து அஞ்சலித்துள்ளனர்.

இந்த அஞ்சலி நிகழ்வில் யாழ். ஊடக அமையத்தின் தலைவர் செல்வக்குமார் அஞ்சலியுரையாற்றுகையில்,

"புலனாய்வுச் செய்திக்கென தத்துரூபமான பொறிமுறையை வகுத்து செய்தியிடலை முன்னெடுத்து வந்த விக்டர் ஐவன் வடக்கின் தகவல்களையும் அச்சமின்றி துல்லியமாக அறிக்கையிட்டவர்." - என்று குறிப்பிட்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கீத் நொயர்...**

இந்தநிலையில் 42 மற்றும் 46 வயதுடைய இருவரே தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் 2018ஆம் ஆண்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

அத்துடன் 2017ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் 5 பேர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**பதுளையில்...**

மண்சரிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, மண்சரிவு காரணமாக பதுளை தெமடவெல்லின்ன கிராமத்துக்கு செல்லும் பிரதான பாதையும் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையால் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கையை விடுத்துள்ளது.

அதன்படி, பதுளை மாவட்டத்தில் கந்தகெட்டிய, பசறை, ஹாலிஎல, பதுளை, ஹப்புத்தளை, மீகஹகிவுல, ஊவா பரணகம மற்றும் சொரணாதொட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நெருக்கடி தரக் கூடிய முடிவு

பாதாள உலகக் குழுவினரின் நடவடிக்கைகள் புதிய அரசாங்கத்துக்கு நெருக்கடியைத் தந்திருக்கின்ற சூழலில், அந்தப் பாதாள உலகக் குழுக்களைக் கையாள்வதற்கு ஆட்சித் தலைமை எடுத்திருக்க முடிவு ஆட்சிக்கு சில புதிய சிக்கல்களைத் தரக்கூடும் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கை நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்ல என்று தெரிவித்திருக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா, அதேசமயம் அக்குழுக்களை கையாள்வது தொடர்பில் எடுத்திருக்கும் தீர்மானம் அல்லது முடிவு அரசுக்கு சில சிக்கல்களைத் தேடித் தர கூடுமென அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பாதாள உலகக் குழுக்களின் துணிகரமான வன்முறை நடவடிக்கைகளின் பின்புலத்தில் முன்னாள் படையினரே உள்ளனர் என்ற தகவல் ஆட்சி தலைமையை சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது. படைகளை - முக்கியமாக இராணுவத்தை - விட்டு சொல்லிக் கொள்ளாமல் ஓடிய முன்னாள் படையினரே இப்போது பாதாள உலகக் குழுக்களுடன் சேர்ந்து இத்தகைய வன்முறை நடவடிக்கைகளை துணிச்சலாக முன்னெடுக்கின்றனர் என்ற கருத்து வெளிப்பட்ட நிலையில், அரசுத் தலைமை ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றது.

படைகளை விட்டுச் சொல்லிக் கொள்ளாமல் வெளியேறிய அனைவரையும் சுற்றி வளைத்து மடக்க நடவடிக்கை எடுக்கவும், அவர்களைப் புனர்வாழ்வு அளித்து சமூகத்தில் விடவும் அரசுத் தலைமை தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அரசுத் தரப்பில் அது தொடர்பான முடிவு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் படைகளை விட்டு இப்படிச் சொல்லிக் கொள்ளாமல் வெளியேறியோர் எண்ணிக்கை 50 ஆயிரத்துக்கு அதிகம் என்று கூறப்படுகிறது. அதிலும் பெரும்பான்மையோர் இராணுவத்தினர்.

இப்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆக 1,400 மட்டுமே என மதிப்பிடப்படுகிறது. அதிலும் ஆயிரத்துக்கும் குறைவானவர்களே முன்னாள் படையினர் என்றும் சொல்லப்படுகின்றது.

ஆக, இராணுவத்தில் இருந்த ஆயிரத்திற்கும் குறைவான முன்னாள் படையினர் பாதாள உலகக் குழுக்களுடன் இணைந்து செயல்படுகின்றனர் என்பதற்காக, இராணுவத்தை விட்டு வெளியேறிய சுமார் ஐம்பதாயிரம் பேரைச் சுற்றி வளைத்துக் கைது செய்து தொல்லைப்படுத்த அரசு முடிவு செய்திருப்பதாக இப்போது அர்த்தப்படுத்த முடியும். அதாவது மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கும் வேலை.

இந்த ஐம்பதாயிரம் பேரில் பெரும்பான்மையோர் முன்னைய அரசுகள் மீது வெறுப்புக் கொண்டு, தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கை வைத்து, அதற்கு ஆதரவாகச் செயல்பட்டவர்கள் என்றும் புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன.

எனவே, ஆயிரத்துக்குக் குறைவான முன்னாள் படையினர் பாதாள உலகக் குழுக்களுடன் சேர்த்து செயல்படுகின்றார்கள் என்ற காரணத்திற்காக பெரும்பாலும் தமக்கு ஆதரவளித்து நின்ற மிகுதி 49 ஆயிரத்துக்கு அதிகமான முன்னாள் படையினரைச் சிக்கலுக்குள் - நெருக்கடிக்குள் - மாட்ட வைக்க அரசு முடிவு எடுத்திருக்கிறது. இது அரசுக்கு எதிரான உணர்வலைகளை மேலும் தீவிரமடைய வைக்கும் என்று கூறப்படுகின்றது.

போதாக்குறைக்கு மேஜர் தரத்துக்குக் கீழான அதிகாரிகளும் சாதாரண படைச் சிப்பாய்களும் தத்தமது கடவுச்சீட்டுகளைத் தங்கள் படைத்தலைமையகத்திடம் கையளிக்க வேண்டும் என்ற புதிய ஒழுங்கு விதியை அரசு கொண்டு வருவது படைத்தரப்பினர் மத்தியில் பெரும் அதிருப்தியையும் எரிச்சலையும் சீற்றத்தையும் ஏற்படுத்தி இருப்பதாகவும் தெரிகிறது. இந்த நடவடிக்கை காரணமாக படை விட்டோடிகள் எண்ணிக்கை அடுத்து வரும் நாள்களில், வாரங்களில், மாதங்களில் பெருகும் என்றும் கூறப்படுகின்றது.

படை விட்டோடிகளை கையாளும் தேசிய மக்கள் சக்தி அரசின் போக்கு அதற்கு எதிர்காலத்தில் சிக்கலை தேடி தருவதாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



# 1,600 போதை மாத்திரைகளுடன் சுதுமலையில் இரண்டு பேர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் சுதுமலையில் 1600 போதை மாத்திரைகளுடன் இருவரை கைது செய்துள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலகவின் வழிகாட்டுதலில் சுதுமலை பகுதிக்கு விரைந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

இதன் பொழுது இரு வகையைச் சேர்ந்த 1600 போதை மாத்திரைகளை கைப்பற்றினர். தொடர்ந்து கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்களை கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டவர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.









# அரச உத்தியோகத்தர்களது ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு உடற்பயிற்சி கல்முனையில்

**(நூருல் ஹுதா உமர்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு விசேட வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொற்றா நோய் மற்றும் மன அழுத்தங்களில் இருந்து விடுபட்டு சகல உத்தியோகத்தர்களதும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸ தீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவு குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

அதற்கிணங்க, பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷ ாத்தால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் உடற்பயிற்சியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றன.

இதன்போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர், தொற்றா நோய் தொடர்பாகவும் உடற்பயிற்சியின் அவசியம் குறித்தும் விளக்கமளித்தார். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி விசேட வைத்திய நிபுணருமான டாக்டர் ஏ.ஏ.எம்.புஹைம் உடற்பயிற்சி யளித்து அது தொடர்பாகவும் விளக்கமளித்தார்.



# திருடர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை!

(பாறுக் ஷிஹான்)

வீடு உடைக்கப்பட்டு நகை மற்றும் பணம் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை காரைதீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் சுமார் நாலரைப் பவுண் தங்க நகைகள் உட்பட பணம் கடந்த வியாழக்கிழமை (27) இரவு திருடப்பட்டுப் போயுள்ளது.

மறுநாள் வெள்ளிக்கிழமை (28) வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் ஆலோசனையில் காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வழிகாட்டுதலில் பொலிஸ் அணி ஒன்று புலனாய்வு மற்றும் தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற வீட்டு உரிமையாளர்கள் குடும்ப சகிதம் அருகில் உள்ள சாய்ந்தமருது பிரதேசத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்று அன்றைய தினம் இரவு 10 மணியளவில் தமது வீட்டுக்கு மீண்டும் திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் நகைகள் வைக்கப்பட்டிருந்த அலுமாரி உட்பட அலுமாரி இருந்த அறை கதவு திறந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்துள்ளனர்.

பின்னர் வீட்டின் நிலைமையைப் பரிசோதனை செய்த போது வீட்டின் மேல் மாடியில் இருந்த கதவு அகற்றப்பட்டு அலுமாரியில் பாதுகாக்கப்பட்டிருந்த நகைகள் மற்றும் பணம் திருடப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர். பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாவடிப்பள்ளி உட்பட புறநகர் பகுதியில் அண்மைக்காலமாக திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் பொது மக்களை விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.



# சம்மாந்துறைப் பகுதிகளில் நரிகள் நடமாட்டம் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

வயல் அறுவடை இறுதிக் கட்டத்தை நெருங்கி இருக்கும் நிலையில் அப்பகுதியில் நரிகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுகின்றன.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெய்னாகாடு மல்கம்பிட்டி பகுதிகளில் இவ்வாறு நரிகளின் நடமாட்டம் தென்படுகின்றது.

இலங்கை நரிகள் அல்லது தென்னிந்திய குள்ள நரிகள் என அழைக்கப்படும், Canis aureus naria எனப்படும் நரிகள் இவை எனக் குறிப்பிடப்படுகின்றது.

வயல்வெட்டுக்கள் அல்லது அறுவடை முடிந்து செம்பு நிறத்தில் காணப்பட்ட வயற்பகுதிக்குள் செம்பு நிறங்களில் நரிகளின் நடமாட்டம் தென்படுகின்றன.வயலின் அடிக்கட்டை எது? நரி எது? என்று தெரியாத உருமறைப்புடன் அப்பகுதியில் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறான நரிகள் ஒரு சூழற்றொகுதியின் சமனிலைக்கு மிக முக்கியமானவை. நரிகள் மயில்கள் போன்ற பீடைகளைக் கட்டுப்படுத்தியும் மற்ற சிறு வேட்டையாடிகளின் குடித்தொகைகளை சமனிலைப்படுத்தியும் விவசாயிகளுக்கும் மக்களுக்கும் நன்மைகள் பயக்கின்றன என இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் உயிரியல் விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பிரிவுத் தலைவருமான ஏ.எம்.றியாஸ் அகமட் குறிப்பிட்டுள்ளார்.




# கிழக்கு மாகாண ஆளுநரின் இரண்டு நூல்கள் வெளியாகின





**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தனசேகர சிங்கள மொழியில் எழுதிய "விஞ்ஞானத்தினதும் மனித மூளையினதும் மர்மங்கள்" மற்றும் ரஸ்சிய மொழியில் எழுதி சிங்கள மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்ட "ஏரியின் மத்தியில் போர்" என்ற இரண்டு நூல்களும் நேற்று (01) திருகோணமலையில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விஞ்ஞானத்தினதும் மனித மூளையினதும் மர்மங்கள் என்ற நூலின் ஆய்வுரையை சிரேஷ்ட எழுத்தாளர் உமா வரதராஜன் நிகழ்த்தினார்.

சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட இரு நூல்களையும் முறையே திருகோணமலை வளாகத்தின் தொடர்பாடல் மற்றும் மொழியியல் துறைத்தலைவர் கலாநிதி ஜீ.ஏ.பீ. கே.கனேகொடவும், ஓய்வு நிலை கிழக்கு மாகாண கலா சாரத்துறைப் பணிப்பாளர் உபநந்த வெலிகலவும் ஆய்வு செய்து உரையாற்றினர்.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக குவைத் நாட்டுக்கான முன்னாள் தூதர் சுப்பிரமணியம் காண்டீபனும் அதிதிகளாக மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.க.ரொஷான் பிரிய சஞ்ஞனவும் அத்துடன் மாவட்ட அரச அதிபர், கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# அழகு குணசீலனின் 'கறுப்பு நட்சத்திரங்கள்' மொழிபெயர்ப்புச் சிறுகதை நூல் வெளியீடு!

**(பழுவூரான்)**

அழகு குணசீலனின் "கறுப்பு நட்சத்திரங்கள்" என்னும் மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை (01) மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரபீட தமிழ்க் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா முன்னிலை வகித்தார்.

தமிழர்களின்பாரம்பரியத்தைவெளிக் கொணரும் வகையில் மங்கல விளக் கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், தமிழ்மொழி வாழ்த்தை சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக இசைத்துறை மாண வர்களான சுலக்ஷினி புவனேந்திரராஜா மற்றும் கந்தையா அனுசியன் ஆகியோர் இசைக்க, "கறுப்பு நட்சத்திரங்கள்" மொழி பெயர்ப்பு நூலின் முதல் பிரதியை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதிகள் நிகழ்வில் கலந்து கொண்டோருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது நூலின் நயவுரைகளை கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி த.மேகராசா, ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜனாபா ஜெய்னுலாப்தீன் நஸீரா மற்றும் பன்முகப் படைப்பாளியும் திறனாய்வாளருமான செங்கதிரோன் தம்பியப்பா கோபாலகிருஷ்ணன ஆகியோர் நிகழ்த்தினர். இறுதியில் நூலாசிரியர் அழகு குணசீலன் ஏற்புரையையும் நன்றியுரையையும் இணைத்ததாக உரையாற்றினார்.











### குப்பைகளால் சுகாதாரச் சீர்கேடு:

# கல்முனை மாநகர சபைக்கு எதிராக மக்கள் போராட்டம்!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபையால் கொட்டப்படும் குப்பைகளால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகக் கூறி கல்முனை கிறீன் பீல்ட் வீட்டுத்திட்ட மக்கள் கவன வீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டமானது கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளி வாசல் அருகில் சனிக்கிழமை (01) நடைபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்தவேளை சம்பவ இடத்துக்கு வருகைதந்த கல்முனை தலைமையக பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது டன் குறித்த பிரச்சினைக்கான சமரச முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

இதன்போது இந்தப் போராட்டத்தில் கிறீன் பீல்ட் வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் ஆண்கள், பெண்கள் உட்பட சிறுவர்கள் பங்கேற்றனர். பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய சுலோகங்களை ஏந்தி நீதி வேண்டி கோசங்களை எழுப்பினர்.பின்னர் பொலிஸாரின் ஆலோசனைக்கு அமைய குறித்த போராட்டம் நிறைவு செய்யப்பட்டு உரிய அதிகாரிகளிடம் பேசி தீர்வொன்றை பெற ஆவண செய்ய நடவடிக்கை எடுக்க கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர இந்தப் பகுதியில் மாநகர சபையாலும் தனியார் சிலராலும் கொட்டப்படும் குப்பைகளால் பெரும் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது என்றும் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது என்றும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

குப்பைகள் எரிக்கப்படுவதால் பாடசாலை மாணவர்கள் முதல் வயது வந்தோர்வரை சுவாசப் பிரச்சினைக்கு உள்ளாகின்றனர் என்றும் யானைகளின் அச்சுறுத்தலும் தொடர்வதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.





# ரம்ழான் மாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்றில் சோதனை!

(றிஸ்வான் சாலிஹூ)

புனித ரம்ழான் மாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்றில் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிறுவனங்களை சோதனைக்கு உட்படுத்தும் விசேட வேலைத் திட்டம் ஒன்று சுகாதார பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸடீன் வழிகாட்டலின் கீழ் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று மற்றும் ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் சனிக்கிழமை (01) பழக்கடைகள், ஹோட்டல்கள், வெதுப்பகங்கள், வியாபார நிலையங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் என்பன திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கல்முனை பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் தலைமையில், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம். முனவ்வர் ஆகியோருடன் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

சுகாதார விதிமுறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. பாவிக்க முடியாத, சேதமடைந்த உணவு தாயாரிக்கும் பாத்திரங்களும் இந்தச் சோதனை நடவடிக்கையின் போது அகற்றப்பட்டன.



# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளுக்குப் புத்தகங்கள்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள செயற்றிட்டங்களுள் ஒன்றான அறநெறி பாடசாலைகளை மேம்படுத்தும் திட்டத்துக்கு அமைவாக நல்லூர் பிரதேச செயலக பிரிவில் இயங்கும் 23 அறநெறிப் பாடசாலைகளுக்கு பாட நூல்கள் திணைக்கள வட பிராந்திய அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இன்று (02) இடம்பெற்ற இந்த நிகழ்வில் அறநெறிப் பாடசாலைகளது ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு புத்தகங்களைப் பெற்றுக் கொண்டனர்.



### காங்கேயனோடை தெற்கு கிராம விவகாரம்;

# அரச அதிபருக்குக் கடிதம் எழுதிய ஹிஸ்புல்லா எம்.பி.

(எஸ். சினீஸ் கான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மன்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள பூர்வீக கிராமமான காங்கேயனோடை 155 பி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் பல தசாப்தங்களாக வசித்து வந்த சுமார் 27 குடும்பங்களை எவ்வித அறிவித்தலுமின்றி அருகிலுள்ள புதிய கிராம சேவையாளர் பிரிவுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை நிறுத்த கோரி கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்குப் பாதிக்கப்பட்ட மக்களின் கையொப்பத்தோடு கடந்த வாரம் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அதன் அடிப்படையில் நேற்று (01) மாவட்ட அரச அதிபரை நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் ஏற்பாட்டில் நேரடியாக சென்று சந்தித்து நிலைமைகளை தெளிவுபடுத்தினர்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவின் கடிதத் தலைப்பில் அரச அதிபருக்கு கடிதம் வழங்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் விரைவாக ஆராய்ந்து பதில் அளிப்பார் என்று அரச அதிபர் இதன்போது உறுதியளித்தார்.





# கந்தளாய் சீனி தொழிற்சாலைக்குச் சொந்தமான விவசாயநிலம் மக்களுக்குப் பயிர்ச் செய்கைக்கு!

(எஸ்.கீதபொன்கலன்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் திட்டத்தின் பிரகாரம், கந்தளாய் சீனி தொழிற்சாலைக்கு சொந்தமான விவசாய நிலம் தற்காலிகமாக அப்பகுதி மக்களுக்கு பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று (01) கந்தளாய் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர, வெளிநாட்டுலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட செயலாளர் ஹேமந்த குமார ஆகியோர் கலந்து கொண்டனர்.





# ரம்ழான் மாத நோன்பு கஞ்சி உணவு உற்பத்திக்கு சுகாதார நடைமுறை!





(பாறுக் ஷிஹான்)

ரம்ழான் காலத்தில் விசேடமாக உற்பத்தி செய்யப்படும் நோன்புக்கஞ்சி உணவுப் பண்டங்கள் என்பனவற்றின் சுகாதார நிலைமைகளை பேணுவது தொடர்பான கலந்துரையாடல் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை (01) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலானது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் நடைபெற்றது.

சாய்ந்தமருது மாவட்ட வைத்திய சாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியும் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான வைத்தியர் சனூஸ் காரியப்பர் சாய்ந்தமருது – மாளிகைக் காடு ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் ஏ.எல்.எம்.சலீம் (சர்க்கி), சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்துக்கு உட்பட்ட உணவு கையாளும் நிறுவன தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் ரமழான் காலத்தில் விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்கள், கஞ்சி விநியோகம் போன்ற விடயங்களில் சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல்வேறு விடயங்களை கவனத்தில் எடுத்து நடைமுறைப்படுத்த பொதுச் சுகாதார பரிசோதகர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

இதில் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்தல், பிளாஸ்டிக் வாளிகளில் கஞ்சி வழங்குவதை முற்றாக நிறுத்துதல், தனிநபர் சுகாதாரம் பேணி தொப்பி, ஏப்ரன் அணிதல், கஞ்சி தயாரிக்குமிடங்களை சுத்தமாக பேணுதல், சுத்தமான உணவுப் பொருள்களைக் கொண்டு ஆரோக்கியமான நபர்கள் மூலம் கஞ்சி தயாரித்தல், உணவைக் கையாள்பவர்களுக்கான மருத்துவ சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளல், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மூலமாக கஞ்சி விநியோகத்தை பரிசீலனை செய்தல், சிற்றுண்டி உணவகங்களில் கண்ணாடிப் பெட்டியில் உணவைக் காட்சிப்படுத்தல், சிற்றுண்டி தயாரிப்பவர்கள் மருத்துவ சான்றிதழ் பெறல், கையுறை, தொப்பி போன்றவை கட்டாயமாக அணிதல், வாடிக்கையாளர் உணவைத் தெரிவதை தடுத்தல், ரமழான் காலத்தில் மட்டும் சிற்றுண்டி தயாரித்து விற்பனை செய்பவர்கள் தங்களை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளல் போன்ற விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டன.

# தனித்துப் போட்டியிடுவதில் த.வெ.க தலைவர் விஜய் உறுதி

## பிரசாந்த் கிஷோர் தகவல்

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதில் விஜய் உறுதியாக உள்ளார் என்று தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோர் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழக 2 ஆம் ஆண்டு தொடக்க விழாவில் பேசிய கட்சித் தலைவர் விஜய் அ.தி.மு. கவை விமர்சிக்கவில்லை. இதனால், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. - த.வெ.க. கூட்டணி அமைய வாய்ப்புள்ளதாகவும், விஜய்க்கு துணை முதல்வர் பதவி அல்லது கர்நாடகாவைப்போல பழனிசாமி விஜய் ஆகியோர் தலா இரண்டரை ஆண்டுகள் முதல்வர் பதவியில் இருக்கலாம் என்று பேசப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், விஜய்க்கு ஆலோசனை வழங்கும் தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த கிஷோர் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில்,



"நானும் விஜயும் நண்பர்கள். சகோதரர்கள். இருவரும் அரசியல் மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறோம். எங்களுக்கு நீண்ட கால இலக்கு உள்ளது. தமிழக அரசியல் களத்தில் பணியாற்றிய அனுபவம் எனக்குண்டு. அந்த அனுபவத்துடன் விஜய்க்கு உதவி செய்வேன், மேலும், நான் அவரை தமிழக அரசியலில் அசைக்க முடியாத சக்தியாக உருவாக்க உதவுவேன். என்னை தமிழகத்தில் உள்ளவர்களுக்குத் தெரிவது போல, பிஹாரில் உள்ளவர்களுக்கு விஜயை தெரியும். அவரால் எனது கட்சிக்கு உதவவும் முடியும்.

தமிழகத்தில் விஜய்க்கு அதிக ரசிகர்கள் உள்ளனர். ஊழல், மதவாதம், வாரிசு அரசியல் ஆகியவைதான் தமிழகத்தில் பெரிய அரசியல் அரசியல் சவால்கள். தேர்தலில் போட்டியிட அதிக பணம் தேவைப்படுகிறது.

தற்போது தமிழகத்தில் மதவாதம் தலைதூக்கத் தொடங்கியுள்ளது. இதற்கு பா.ஜ.கதான் காரணம், அவர்களுக்கு தமிழகத்தில் இரட்டை இலக்க வாக்கு சதவீதம் உள்ளது. தமிழக அரசியலில் வாரிசு அரசியல் அதிகமாக உள்ளது. அதேநேரத்தில், முதல்வர் ஸ்டாலினுக்கு நீண்ட அரசியல் பயணம் உண்டு. அவரை வாரிசு அரசியல்வாதியாக கருத முடியாது. ஆனால், உதயநிதியை அப்படிப் பார்க்க முடியாது. அவர் விரைவாக துணை முதல்வராக மாறிவிட்டார். எனவே, வாரிசு அரசியலை எதிர்த்துப் போராட வேண்டும்.

விஜய் ரசிகர்களின் பலத்தை வாக்குகளாக மாற்ற, கட்டமைப்புப் பணியில் ஈடுபட வேண்டும். நவீனத் தொழில்நுட்ப உலகில், இந்தப் பணியை குறுகிய காலத்தில் சாதிக்க முடியும். தமிழக மக்கள் அவரை அரசியல் மாற்றத்துக்கான நட்சத்திரமாகப் பார்க்கிறார்கள்.

மேலும், சிறந்த அரசியல் தலைவராகவும் அவரை மதிப்பிடத் தொடங்கியுள்ளனர். அவரது பேச்சைக் கேட்கத் தொடங்கியுள்ளனர். அவர் தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்வதுடன், மக்களை நேரில் சந்திக்க வேண்டும். நிச் சயம் அவற்றை மேற்கொள்வார். இன்னும் ஒரு மாதத்தில் தீவிர அரசியல் களப் பயணத்தில் ஈடுபடுவார்.

தமிழக மக்கள் தேடும் நேர்மையான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் தகுதி விஜய்க்கு உண்டு. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவு பெரிய ஆச்சரியத்தை தரும். விஜய் மிகப் பெரிய சக்தியாக உருவெடுப்பார். அவர் தனித்துப் போட்டியிடவே விரும்புகிறார். நிச்சயம் கூட்டணி கிடையாது.

தி.மு.கவுக்கு எதிரான வாக்குகளை இணைக்க அ.தி.மு.க. முயற்சிக்கும், ஆனால், த.வெ.க. உறுதியாக தனித்தே போட்டியிடும். தனித்து நிற்பதுதான் எங்களின் நிலைப்பாடு."- என்றார்.

# பாலியல் வன்கொடுமை செய்பவர்களை அதே இடத்தில் தண்டிக்க வேண்டும்!

## அன்புமணி ராமதாஸ் கருத்து

தனது ஆட்சியில், பாலியல் வன் கொடுமை செய்பவர்கள் அதே இடத்தில் வைத்தே தண்டிக்கப்படுவார்கள் என பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி பகுதியில் உள்ள பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர்



இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் போதைப் பொருள்களின் பாவனை அதிகரித்து வருகிறது. இதற்கு தமிழக முதலமைச்சரே காரணம்.

அத்துடன், தமிழ்நாட்டில் சட்டமும் கிடையாது சட்ட ஒழுங்கும் கிடையாது. பெண்கள் எங்கும் பாதுகாப்பாக தனியாக செல்ல முடியாத சூழல் உருவாகியுள்ளது." - என்றார்.

# ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு போர் நிறுத்தத்தை நீடிக்கும் இஸ்ரேல்!





ரம்ழான் மற்றும் யூதர்களின் பாஸ்ஓவர் பண்டிகை காலங்களை முன்னிட்டு, தற்போது அமுலில் உள்ள போர்நிறுத்தத்தை, ஆறு வாரங்களுக்கு தற்காலிகமாக நீடிப்பதற்கு இஸ்ரேல் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முன்னதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போர்நிறுத்தத்தின் முதல் கட்டம் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

நிறைவடைந்த சிறிது நேரத்தில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் உத்தியோகபூர்வமாக இந்த அறிவிப்பை வெளியிட்டது.

இந்த நிலையில், டொனால்ட் ட்ரம்பின் விசேட பிரதிநிதியினால் சமர்ப்பிக்கப்பட்ட போர் நிறுத்த திட்டத்தின் கீழ், காசாவில் ஹமாசினால் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயகைதிகளில் 50 சத வீதமானவர்கள் முதல் நாளிலேயே விடுவிக்கப்படுவார்கள் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது

இருப்பினும், நிரந்தர போர் நிறுத்தம் குறித்து ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டால் பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய காலத்தில், இஸ்ரேலிய நடவடிக்கைகள் குறித்து ஹமாஸ் பகிரங்கமாக எந்த கருத்தினையும் தெரிவிப்பதில்லை.

பிரதமர் நெத்தன்யாகுவினால் அழைப்பு விடுக்கப்பட்டு நான்கு மணி நேரம் நடந்த கூட்டத்தின் பின்னரே, இஸ்ரேலிய அரசாங்கம் போர் நிறுத்த நீடிப்பை ஆதரித்தது.

எனினும் அமெரிக்க விசேட பிரதிநிதியினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தை ஹமாஸ் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளது.

ஹமாஸ் தனது நிலைப்பாட்டை மாற்றினால் இஸ்ரேல் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மேற்கு கரையில் உள்ள பாலஸ்தீன அதிகார சபை உட்பட ஏனைய பாலஸ்தீனிய நிர்வாக கட்டமைப்புக்களை கையளிக்க தயாராகவுள்ள போதிலும், காசாவில் ஒரு சக்திவாய்ந்த அமைப்பாக இருப்பதில் ஹமாஸ் உறுதியாக உள்ளதாக கருதப்படுகிறது.



# உக்ரைன் ஜனாதிபதியுடன் பிரித்தானிய பிரதமர் சந்திப்பு

அமெரிக்க ஜனாதிபதியுடனான சந்திப்பைத் தொடர்ந்து உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஷெலென்ஸ்கி, பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

உக்ரைனுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகப் பிரித்தானிய பிரதமர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் உக்ரைனுக்கான இராணுவ உதவிகளை வழங்கும் 2.6 பில்லியன் பவுண்ட்ஸ் கடன் உடன்படிக்கையில் இருவரும் கைச்சாத்திட்டுள்ளனர். ரஷ்யாவின் சொத்துக்களை முடக் கியமையின் ஊடாக கிடைக்கப் பெற்ற நிதியிலிருந்து பிரித்தானியா இந்த கடனை வழங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 02/03/2025

## ஜஸ்டின் ட்ரூடோ லண்டன் விஜயம்

கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இன்று காலை லண்டனுக்குப் விஜயம் செய்துள்ளார்.

நாளைய தினம் நடைபெறும் ஐரோப்பிய பாதுகாப்பு உச்சி மாநாட்டில் அவர் 02▶



# கனடிய அரசியல்வாதிகளை கடுமையாக விமர்சித்தார் ட்ரம்ப்

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடா அரசியலில் தலையிடும் வகையில் புதிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.**

**அமெரிக்கா - கனடா வர்த்தக உறவுகளில் மிகப்பெரிய 25 வீத இறக்குமதி வரியை விதிப்பதற்கான இறுதி திகதி மீண்டும் நெருங்கி வரும் நிலையில், கனடாவின் முன்னாள் நிதியமைச்சர் க்ரிஸ்டியா ஃப்ரீலாண்டை கடுமையாக விமர்சித்துள்ளார்.**

க்ரிஸ்டியா ஃப்ரீலாண்டு மிக மோசமானவர், என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், கனடாவின் லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் க்ரிஸ்டியா ஃப்ரீலாண்டை மிக மோசமானவர் என ட்ரம்ப் திட்டியுள்ளார்.

மேலும், க்ரிஸ்டியா நிதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்தது தமது செயற்பாடுகளினாலேயே என தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பியே பொலியேவ் தொடர்பிலும் ட்ரம்ப் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ இடையிலான வர்த்தக ஒப்பந்தத்தில் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ட்ரம்பின் உத்தரவால் 25 வீத வரியை அமல்படுத்துவது மார்ச் 4 திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எரிசக்தி இறக்குமதிக்கு 10 வீத வரி விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத குடியேறிகள் உள்ளிட்ட விவகாரங்களில் கனடாவும் மெக்சிகோவும் எதுவும் செய்யவில்லை என ட்ரம்ப் கடுமையாக விமர்சித்துள்ளார்.





# பிரித்தானிய பிரதமரின் கருத்து தொடர்பில் வருத்தம் தெரிவித்தார் ரோலண்ட் பாரீஸ்

அமெரிக்கா, பிரித்தானியாவின் நட்பு நாடு என பிரித்தானிய பிரதமர் கூறிய விடயம் கனடா தரப்புக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது போல் தெரிகிறது.

ட்ரம்ப் பல்வேறு நாடுகள் மீது வரிகள் விதிக்க இருப்பதாக் கூறி வரும் நிலையில், ட்ரம்பின் வரிவிதிப்பிலிருந்து தப்புவதற்காக ட்ரம்பை சந்திக்க அமெரிக்கா சென்றார் பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர்.

அவர் எதிர்பார்த்ததுபோலவே பிரித்தானியா வரிவிதிப்பிலிருந்து தப்பலாம் என்னும் நிலையும் உருவாகியுள்ளது.

ஆனால், ட்ரம்ப் அமெரிக்காவுக்கு லாபம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டார்.

எனவே, அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஒரு சிறந்த வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்றும், அப்படி ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும் பட்சத்தில், வரி விதிப்புகளுக்கான அவசியமே இல்லாமல் போய் விடும் என நினைக்கிறேன் என்றும் கூறியுள்ளார் ட்ரம்ப்.

இந்நிலையில், வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மரும் ஊடகவியலாளர்களை சந்தித்தபோது ஊடகவியலாளர் ஒருவர், கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது குறித்த ட்ரம்பின் அறிக்கைகள் குறித்து நீங்கள் அவருடன் விவாதித்தீர்களா என ஸ்டார்மரிடம் கேள்வி எழுப்பினார்.

மேலும், பிரித்தானிய மன்னர், தனது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஒரு நாட்டை, அவரது கட்டுப்பாட்டிலிருந்து அகற்ற விரும்பும் அமெரிக்க ஜனாதிபதியின் விருப்பம் குறித்து கவலை தெரிவித்தாரா என ஸ்டார்மரிடம் கேட்டார் அந்த ஊடகவியலாளர்.

அதற்கு, நீங்கள் எங்களிடையே இல்லாத ஒரு பிளவை கண்டுபிடிக்க நீங்கள் முயற்சிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன், எங்கள் நாடுகள் இரண்டும் மிக நெருங்கிய நட்பு நாடுகள் என்று பதிலளித்தார் ஸ்டார்மர்.

ஆனால், கனடா தொடர்பான கேள்விக்கு ஸ்டார்மரின் பதில் துரதிர்ஷ்டவசமானது என கனடா பிரதமர் ட்ரூடோவின் முன்னாள் ஆலோசகரான ரோலண்ட் பாரீஸ் தெரிவித்துள்ளார்.

கனடா ஒரு இறையாண்மையுள்ள நாடு என ஸ்டார்மர் கூறியிருக்கவேண்டும் என்கிறார் பாரீஸ். அதற்கு பதிலாக, தனது நிலைக்கும் ட்ரம்பின் நிலைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என கூற அந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டார் ஸ்டார்மர் என்கிறார் அவர்.

ட்ரம்பின் மூடைக் கெடுக்கக்கூடாது என்பதற்காக, எங்களுக்கு துரோகம் செய்துவிட்டார் ஸ்டார்மர் என்கிறார் பாரீஸ்.

இதற்கிடையில், ஊடகவியலாளர்களை சந்தித்த கனடா வெளியுறவு அமைச்சரான மெலானி ஜோலி, கனடாவையும் பிரித்தானியாவையும் பிரிக்க உலகில் எந்த நாடாலும் முடியாது என்று கூறியுள்ளார்.

பிரித்தானியாவுடன் நெருக்கமான நட்பு என்பது, கனேடியர்களான எங்கள் டி.என்.ஏ. இல் உள்ளது என்றும் ஜோலி கூறியுள்ளார்.







## கனடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்கேற்க உள்ளார்.

உக்ரைனில் நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கான அடிப்படை நிலைமைகளை அமைப்பதற்கான முயற்சிகளில் ட்ரூடோ ஈடுபடுவார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உச்சி மாநாடு ஆரம்பத்தில் ஐரோப்பிய தலைவர்களை உள்ளடக்கியதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், தற்போது அதன் முக்கியத்துவம் மேலும் உயர்ந்துள்ளது. உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி இந்த மாநாட்டில் பங்கேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

வொளாடிமிர் ஜெலன்ஸ்கி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உடன் வெள்ளை மாளிகையில் சந்தித்து கடுமையான பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து, இந்த மாநாடு மிகுந்த கவனத்தை பெற்றுள்ளது.

உக்ரைன் - அமெரிக்கா இடையே முக்கிய கனிமப்பொருள்கள் தொடர்பான ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

இது உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டு செல்லும் முயற்சியின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது.

ஆனால், அமெரிக்க பாதுகாப்பு உத்தரவாதங்களைச் சேர்க்க வேண்டுமென்று ஜெலன்ஸ்கி வலியுறுத்தியதை ட்ரம்ப் வெறுப்புடன் எதிர்க்க, நிலைமை இன்னும் சிக்கலாகியுள்ளது.



# போனி கிராம்பி கட்சித் தலைமை பதவியை தொடர்வதற்கு ஆதரவு

ஒண்டாரியோ லிபரல் கட்சியின் தலைமைப் பதவியில், போனி கிராம்பி தொடர வேண்டும் என்று ஏகமனதாக ஆதரவு வெளியிடப்பட்டுள்ளது.

ஒண்டாரியோ லிபரல் கட்சியின் நிர்வாகக் குழு இந்த ஆதரவினை வெளியிட்டுள்ளது. அவர் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தலில் கிராம்பி தோல்வியைத் தழுவியிருந்தார்.

எனினும், அவரது தலைமையின் கீழ் கட்சி மீண்டும் அதிகாரப்பூர்வ கட்சி அந்தஸ்தை பெற்றதைக் கவனத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.இந்தத் தேர்தலில் லிபரல் கட்சி 14 ஆசனங்களை வென்று, ஏழு ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அதிகாரப் பூர்வ கட்சியாக என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

தேர்தலில் மூன்றாவது அதிக இடங்களைப் பெற்றிருந்தாலும், 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஒண்டாரியோ மக்கள் லிபரல்களுக்கு வாக்களித்தனர்.

கட்சியை வழிநடத்த போனி கிராம்பியைவிட திறமையானவர் வேறு இல்லை என லிபரல் கட்சி தவிசாளர் கேத்ரின் மெக்காரி, தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கிராம்பி நிர்வாக குழுவின் ஆதரவிற்கு நன்றி தெரிவித்து, கட்சியை தொடர்ந்து வழிநடத்த உறுதியுடன் இருகின்றேன் என தெரிவித்தார்.

# ஸ்கார்பரோவில் கடைத்தொகுதி துப்பாக்கிச் சூடு; ஒருவர் காயம்




ஸ்கார்பரோவில் அமைந்துள்ள கடைத்தொகுதியொன்றில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை, பொலிஸார் தற்போது தேடி வருகின்றனர்.

சவுத் சீடர்பிரே பகுதியில், பெல்லமி ரோடு மற்றும் நேல்சன் தெரு அருகே, எக்லிங்டன் அவென்யூ ஈஸ்ட் வடக்கில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் துப்பாக்கிச் சூடு இடம் பெற்றதாக பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த அழைப்பின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த அதிகாரிகள், துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான ஒருவரை மீட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட நபர் படுகாயங்களுடன் இருந்தாலும், அவரது உயிருக்கு ஆபத்து இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படுகாயமடைந்த நபர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்திற்குப் பிறகு, சந்தேக நபர் அந்த இடத்தை விட்டு தப்பியோடியுள்ளார்.

சந்தேக நபர் சுமார் 20 வயதிற்கு உட்பட்டவர் எனவும், கருப்பு இனத்தவராகவும், சுமார் ஆறு அடி உயரமுடையவர் எனவும் பொலிஸார் விபரித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.